AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 5 PRINTED SIZE: 179.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 1,172.00 ITEM ID: MY0063151599



03 APR, 2025

# Energy supply remains stable following Putra Heights pipeline fire - Fadillah

Makkal Osai, Malaysia

# மின்சார விநியோகத்தில் பாதிப்பு இல்லை

கூச்சிங், ஏப். 3-
புத்ராஹைட்ஸில் நிகழ்ந்த தீச்சம்பவத்தினால் தீபகற்ப மலேசியாவில் மின்விநியோகம் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை என்று துணைப் பிரதமர் டத்தோஶ்ரீ ஃபடிலா யூசோப் கூறினார்.

தீபகற்ப மலேசியாவில் எரிசக்தி உருவாக்கத்திற்கு எரிவாயும் ஒரு முக்கிய அம்சமாக இருந்தாலும் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்கும் தகவல்களின் அடிப்படையில் மின் விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்று எரிசக்தி, குடிநீர் உருமாற்றத்துறை அமைச்சருமான அவர் குறிப்பிட்டார்.

சில எரிசக்தி உருவாக்கத்திற்கு எரிவாயு தேவைப்படுகிறது. அதில் கசிவு ஏற்படும் பட்சத்தில் அதன் விநியோகம் பாதிக்கப்பட்டு மின்சார விநியோகம் தடைப்படுவது இயல்பு.

ஆனால் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்கும் தகவல்களின்படி எரிவாயு விநியோகம் நிலையாக இருக்கின்றது என்பது தெரிய வந்திருக்கிறது என்று இங்கு பெத்ராஜெயாவில் தம்முடைய ஹரிராயா திறந்த இல்ல உபசரிப்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் தெரிவித்தார்.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.